WWW.OLEVELAPI.COM



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

42 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බ
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்ப
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

## கர்நாடக சங்கீதம் II

**கவனிக்க :**
※ **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) பல்வேறு வகையான இசைக்கருவிகள் ஒன்றாக இணைந்து இசைக்கப்படும் நிகழ்ச்சியின் சிறப்புப் பெயர் யாது ?

(ii) ஹிந்துஸ்தானி இசையின் பிரதான தாள வாத்தியம் யாது ?

(iii) பொன் ஸ்ரீ வாமதேவன் அவர்களால் இயற்றப்பட்ட இலட்சணகீதம் யாது ?

(iv) கனராக பஞ்சரத்ன கீர்த்தனைகளை தெலுங்கு மொழியில் இயற்றியவர் யார் ?

(v) T.R. மகாலிங்கம் எவ்வாத்தியத்தினை வாசித்துப் பிரபல்யமடைந்தார் ?

(vi) திருப்பல்லாண்டினை அருளிய நாயனார் யார் ?

(vii) பஜனைப் பத்ததியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார் ?

(viii) "சபாபதிக்கு வேறு தெய்வம்..." என்னும் ஆபோஹி இராகக் கீர்த்தனையை இயற்றியவர் யார் ?

(ix) அக்னி-கோ, திசி-மா என்னும் ஸங்க்ய ஸங்கேதாட்சரங்களால் குறிப்பிடப்படும் இராகங்கள் முறையே யாவை ?

(x) நவரோஜ் இராகத்திற்கு இணையான **இரண்டு** பண்களைத் தருக.

**2.** பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாகத் தருக.
(உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன எழுதப்படல் வேண்டும்).

(i) பந்துவராளி

(ii) மத்யமாவதி

(iii) தோடி

WWW.OLEVELAPI.COM

**3.** பின்வருவனவற்றுள் விரும்பிய ஒன்றினைப் பற்றி விரிவான விளக்கத்தைத் தருக.
(இயற்றியவர் பெயரையும் உதாரணங்களையும் தெரிவுசெய்த விடயத்திற்கேற்ப குறிப்பிடல் வேண்டும்).

(i) இராகமாலிகை

(ii) சாபுதாளம்

(iii) விவாதி மேளங்கள்

**4.** (i) மிருதங்க வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

(ii) இவ்வாத்தியத்தின் சிறப்புகள் **இரண்டினைத்** தருக.

(iii) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

(iv) இவ்வாத்தியத்தினை சுருதி சேர்க்கும் முறை பற்றி விளக்குக.

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

5. முத்துத்தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப் பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

(i) வாழ்க்கைக் காலம்

(ii) பிறந்த இடம்

(iii) இளமைக் காலம்

(iv) வாழ்க்கைச் சம்பவங்கள்

(v) இவர் இயற்றிய உருப்படிகள் **நான்கு**

(vi) இவரது உருப்படிகளின் சிறப்புகள் **இரண்டு**

6. பின்வரும் அலங்காரத்தினைப் பூர்த்தி செய்க.

| $|_5$ | | O | | $|_5$ |
|---|---|---|---|---|
| ஸரீகம | / | கரி | / | ஸாரிகம // |

7. கர்நாடக சங்கீதத்தில் இசைக் குறியீடுகளின் முக்கியத்துவத்தினைக் கூறி அவற்றுள் ஸ்தாயிக் குறியீடுகள், இதர இசைக் குறியீடுகள் பற்றி விரிவாகத் தருக.

**அல்லது**

இந்தியாவில் கர்நாடக இசை வரலாற்றில் 16ஆம், 17ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்க.

* * *

WWW.OLEVELAPI.COM

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...